திரு. ஆர். பொன்னப்ப நாடார் : *தகுதி வாய்ந்த நபர்கள் கன்னியாகுமரி ஜில்லாவில் தாசில்தாராக வருவதற்கு இருக்கிறார்கள். டபிள் டிகிரி ஹோல்டர்கள் இருந்தும் வேண்டுமென்றே அவர்களுடைய சீனியாரிடியைப் புறக்கணித்து, வெளியில் இருந்து ஆட்களைக் கொண்டுவந்து அவர்களுடைய ப்ரமோஷன்களைத் தடை செய்வதற்குக் காரணம் என்ன?*

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is incorrect to say that there are qualified people. Kanyakumari district is short of qualified personnel to man the posts of Deputy Tahsildars and Tahsildars. Persons are included in the lists year after year by grant of concessions and exemptions from rules. Notwithstanding this, it has become necessary to borrow staff from Tirunelveli district to man certain posts in the Civil Supplies Branch. The number of persons so taken on deputation depends on the number of persons that cannot be filled by local qualified personnel from time to time. Both the persons now working in Kanyakumari district are already in the list of Tahsildars for Tirunelveli district. No one included in the list of Tahsildars for Kanyakumari district is acting in a lower post.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : *கன்னியாகுமரி மாவட்டத்திலேயே தாசில்தாராக வருவதற்குத் தகுதியான நபர்கள் இருந்தும் அடுத்த மாவட்டத்தில் இருந்து அங்கே கொண்டுவருவதற்கான காரணம் என்ன?*

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : *தவறான வாதத்தை திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்வது நியாயம் ஆகாது. தாசில்தாருக்குள்ள விதிகளை பல தடவைகள் தளர்த்தியும் கூட, அந்தப் பகுதியில் இருந்தே தாசில்தாராக வருவதற்கு தகுதி உடையவர்கள் இல்லை. ஆகவே வெளியில் இருந்து கொண்டுவர வேண்டியதாக இருக்கிறது.*

அரசு மருத்துவ மனைகள்

*** 317 விறு.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** *மதிப்பிற்குறிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) *சிதம்பரம் தாலுகா சேத்தியாதோப்பில் இருக்கும் அரசாங்க மருத்துவ நிலையம்* **(Maternity Centre)** *சுமார் 6 மாத காலமாக மூடிக் கிடப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?*

(இ) *ஆம் எனில், அதன் காரணம் என்ன?*

(உ) *அதை உடனடியாக திறக்க உத்தேசம் எதேனும் உண்டா?*

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) *சேத்தியாத் தோப்பிலுள்ள அரசு மருத்துவ மனையும், மகப்பேறு இல்லமும்அமைந்துள்ள கட்டிடம் சீர்கேடான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததாலும், அந்தக் கட்டிடத்தைப் பயன்படுத்துவது ஆபத்தானதென்று பொதுப் பணித்துறை அதிகாரிகள் அறிவித்திருந்ததாலும், மேற்படி மருத்துவ மனையையும் மகப்பேறு இல்லத்தையும் மூடுமாறு மருத்துவத்துறை நெறியாளர் கருத்துதெரிவித்தார். இத்திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டது எனவே மருத்துவ மனையும் மகப்பேறு இல்லமும்* **22—2—1967** *முதல்* **21—5—1967** *வரையில் மூடப்பட்டிருந்தன.*

(உ) *வாடகைக்கு வேறு கட்டிடம் அமர்த்தப்பட்டது. சேத்தியாத்தோப்பிலுள்ள அரசு மருத்துவ மனையும் மகப்பேறு இல்லமும் அந்த வாடகைக் கட்டிடத்தில்* **22—5—1967** *முதல் மீண்டும் செயல்படத் தொடங்கின.*